ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2022.05.23 |

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2022 ஏப்பிறலில் மேலும் அதிகரித்தது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு, 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 மாச்சின் 21.5 சதவீதத்திலிருந்து 2022 ஏப்பிறலில் 33.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான பணவீக்கத்தின் இத்தகைய அதிகரிப்பானது 2022 ஏப்பிறலில் உணவு மற்றும் உணவல்லா ஆகிய இரு வகைகளினதும் மாதாந்த அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, உணவுப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2022 மாச்சில் 29.5 சதவீதத்திலிருந்து 2022 ஏப்பிறலில் 45.1 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2021 மாச்சின் 14.5 சதவீதத்திலிருந்து 2022 ஏப்பிறலில் 23.9 சதவீதத்திற்கு அதிகரித்தது

| பணவீக்கம் | மாச்சு 2022 | ஏப்பிறல் 2022 |
|---|---|---|
| **முதன்மை** | | |
| சுட்டெண் பெறுமதி | 172.7 | 190.3 |
| மாதாந்த மாற்றம் (%) | 2.9 | 10.2 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 21.5 | 33.8 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 10.6 | 13.0 |
| **மையம்** | | |
| சுட்டெண் பெறுமதி | 166.3 | 182.3 |
| மாதாந்த மாற்றம் (%) | 3.2 | 9.6 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 17.3 | 27.9 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 8.2 | 10.2 |







தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2022 ஏப்பிறலில் 10.22 சதவீதத்தினைப் பதிவுசெய்ததுடன் இதற்கு, முறையே 6.03 சதவீதத்தினையும் 4.19 சதவீதத்தினையும் கொண்ட உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தன. அதற்கமைய, உணவு வகையினுள், அரிசி, பால்மா, பருப்பு, சீனி மற்றும் பாண் போன்றவற்றின் விலைகளில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், மாதகாலப்பகுதியில் போக்குவரத்து (பெற்றோல், பேருந்துக் கட்டணம் மற்றும் டீசல்), வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருள் (பராமரிப்பதற்கான பொருட்கள், வீட்டுவாடகை, திரவப் பெற்றோலிய எரிவாயு), நலம் (தனியார் மருத்துவ நடவடிக்கைகளுக்கான கட்டணங்கள்) கல்வி (பிரத்தியேக வகுப்புக் கட்டணங்கள்), மற்றும் உணவகங்கள் அத்துடன் விடுதிகள் போன்ற துணை வகைகளில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களின் முக்கிய காரணமாக உணவல்லா வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

அதேவேளை, ஆண்டுச் சராசரி பணவீக்கம் 2022 மாச்சின் 10.6 சதவீதத்திலிருந்து 2022 ஏப்பிறலில் 13.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2022 மாச்சின் 17.3 சதவீதத்திலிருந்து 2022 ஏப்பிறலில் 27.9 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 மாச்சின் 8.2 சதவீதத்திலிருந்து 2022 ஏப்பிறலில் 10.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

[1] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013=100) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

**துணைவகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்) ரீதியான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம்**




**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் (2013=100)**

| காலம் | | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) |
| 2021 | ஏப்பிறல் | 142.2 | 142.5 | 0.1 | 0.5 | 5.5 | 4.1 | 5.3 | 4.4 |
| | மே | 143.6 | 143.7 | 1.0 | 0.8 | 6.1 | 4.2 | 5.4 | 4.4 |
| | யூன் | 145.7 | 144.6 | 1.5 | 0.6 | 6.1 | 4.1 | 5.4 | 4.4 |
| | யூலை | 146.6 | 145.6 | 0.6 | 0.7 | 6.8 | 4.4 | 5.4 | 4.4 |
| | ஓகத்து | 147.1 | 146.5 | 0.3 | 0.6 | 6.7 | 4.7 | 5.5 | 4.4 |
| | செத்தெம்பர் | 147.5 | 147.2 | 0.3 | 0.5 | 6.2 | 4.8 | 5.5 | 4.4 |
| | ஒத்தோபர் | 150.6 | 150.6 | 2.1 | 2.3 | 8.3 | 7.2 | 5.7 | 4.6 |
| | நவெம்பர் | 155.3 | 153.0 | 3.1 | 1.6 | 11.1 | 8.8 | 6.2 | 5.0 |
| | திசெம்பர் | 161.0 | 155.7 | 3.7 | 1.8 | 14.0 | 10.8 | 7.0 | 5.5 |
| 2022 | சனவரி | 166.0 | 159.2 | 3.1 | 2.2 | 16.8 | 12.9 | 8.1 | 6.2 |
| | பெப்புருவரி | 167.8 | 161.2 | 1.1 | 1.3 | 17.5 | 14.1 | 9.3 | 7.1 |
| | மாச்சு | 172.7 | 166.3 | 2.9 | 3.2 | 21.5 | 17.3 | 10.6 | 8.2 |
| | ஏப்பிறல் | 190.3 | 182.3 | 10.2 | 9.6 | 33.8 | 27.9 | 13.0 | 10.2 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்